**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.
Prosecution witness for P.W. 30 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மணிமாறன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை தடய அறிவியல் துறையில் மானுடவியல் பிரிவில் உதவி இயக்குநராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு மேற்படி அலுவலகத்தில் மேற்படி பிரிவில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது 02.05.2019 அன்று கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண் 1-ன் கடிதத்துடன் நாலாட்டின்புதூர் காவல்நிலைய குற்ற எண் 62/2019 சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்களான இரண்டு புகைப்படங்கள், துண்டிக்கப்பட்ட மனித தலை ஆகியவற்றை தலைமை காவலரான அ.சா.21 எங்கள் ஆய்வகத்திற்கு எடுத்து வந்தார். அதில் முத்திரையிடப்பட்ட ஒரு காகித உறையிலிருந்து ஒரு ஆண் நபரின் இரண்டு ஒரே மாதிரியான வண்ண புகைப்படங்களை பொருள் ஒன்று என்றும், முத்திரையிடப்பட்ட ஒரு பிளாஸ்டிக் வாளியிலிருந்த துண்டிக்கப்பட்ட மனித தலையை பொருள் இரண்டு என்றும் விவரிக்கப்பட்டு, பின்பு தலையானது சுத்தம் செய்யப்பட்டு கீழ்தாடையுடன் கூடிய மண்டை ஓடு பெறப்பட்டது. மண்டை ஓட்டின் இரு கண் குழிகளின் வெளி விளிம்பிற்கு இடைப்பட்ட தூரம் 8.6 செமீ ஆக

இருந்தது. இதன் அடிப்படையில் பொருள் ஒன்று புகைப்படமானது சுய உருவ அளவிற்கு பெரிதாக்கப்பட்டு மேற்படி மண்டை ஓடு பொருள் ஒன்றில் உள்ள உருவத்துடன் ஒத்துப்போகிறதா என்பதை பரிசோதித்தோம். மேற்படி ஆய்வில் மேற்படி மண்டை ஓடு மேற்படி புகைப்படத்தில் உள்ள ஆண் நபருக்கு உரியதாக இருப்பதற்கு சாத்தியம் இருப்பதாக கண்டறியப்பட்டது. மே,ற்படி மண்டை ஓட்டின் உருவப்படம் **அ.சா.ஆ 36**. மேற்படி நபரின் புகைப்படம் **அ.சா.ஆ 37**. மேற்படி நபரின் ஒரு பக்கமும், அ.சா.ஆ 36 ல் உள்ள உருவத்தின் ஒரு பக்கமும் பொருத்தி சரிபார்க்கப்பட்டதற்கான உருவப்படம் **அ.சா.ஆ 38**. மேற்படி அ.சா.ஆ 36 ல் உள்ள உருவத்தையும், அ.சா.ஆ 37 ல் உள்ள நபரின் உருவத்தையும் பொருத்தி பார்த்ததற்கான உருவப்படம் **அ.சா.ஆ 39**. அ.சா.ஆ 36 ல் உள்ள நபரின் வண்ண புகைப்படம் **அ.சா.ஆ 40**. காவல் ஆய்வாளர் நீதிமன்றத்திற்கு கொடுத்த கடிதங்கள் **அ.சா.ஆ 41 மற்றும் 42**. அதன் அடிப்படையில் நீதிமன்றத்திலிருந்து ஆய்வகத்திற்கு கொடுக்கப்பட்ட கடிதங்கள் **அ.சா.ஆ 43 மற்றும் 44**. மேற்படி ஆய்வின் அறிக்கையை நீதிமன்ற மூலமாக பெற வேண்டுமென்று கொடுக்கப்பட்ட கடிதம்தான் அ.சா.ஆ 42. மேற்படி மண்டை ஓடு மேற்படி புகைப்படத்தில் இருக்கும் நபருக்கு சொந்தமானது என்பதற்கான சாத்தியம் இருப்பதாக நான் வழங்கிய அறிக்கை நகல் **அ.சா.ஆ.45**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 45 ன் படி மேற்படி புகைப்படத்தில் உள்ள நபருக்கு மேற்படி மண்டை ஓடு பொருந்துவதற்கான சாத்தியம் இருப்பதாக அறிக்கை வழங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி நபரின் உருவத்தைப் போலவே உள்ள மற்ற நபரின் உருவமும் மேற்படி மண்டை ஓட்டிற்கு

மேற்படி ஆய்வின்படி பொருந்தக்கூடும் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த தேதி ஞாபகமில்லை. போலீஸ் விசாரணையில் மேற்படி ஆவணங்களைப் பற்றி நான் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி அறிக்கையை தவறாக வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு நபரின் புகைப்படத்தையும், ஒரு மண்டை ஓட்டையும் வைத்து அந்த மண்டை ஓடு புகைப்படத்தில் உள்ள நபருக்கு சொந்தமானது என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, through V.C., in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.06.22 18:18:31 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.